**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>**

<u>வாக்குமூல படிவம்</u>

**<u>REA.No. 4/2025</u>**
**<u>in</u>**
**<u>REP.No. 28/2016</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பத்மாவதி | ம.சா : | 1 |
| க/பெயர் : | சுப்ரமணி | தொழில் : | விவசாயம் |
| ஊர் : | அக்கலாம்பட்டி | தாலுக்கா : | திருச்செங்கோடு |
| வயது : | 42 | நாள் : | 04.06.2026 |

ம.சாட்சி 1–ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>:–**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்து மூலமான நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தை முதல் விசாரணையாக கேட்டுகொள்கிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

1. 23.05.2007ம் தேதியிட்ட சுப்ரமணியம் பெயரில் உள்ள கிரய பத்திரம் பதிவு நகல் – ம.சா.ஆ1

2. 11.11.2016ம் தேதியிட்ட கோரிக்கையாளர் (பத்மாவதி) பெயரிலுள்ள கிரய பத்திரம் பதிவு நகல் – ம.சா.ஆ2

3. சுப்ரமணியம் பெயரிலுள்ள கந்தாய இரசீதுகள் அசல் (எண்ணிக்கை 5) – ம.சா.ஆ3

4. சுப்ரமணியம் பெயரிலுள்ள வீட்டுவரி இரசீதுகள் அசல் (எண்ணிக்கை 3 ) – ம.சா.ஆ4

5.சுப்ரமணியம் பெயரிலுள்ள மின்கட்டண இரசீதுகள் அசல் (எண்ணிக்கை 9) – ம.சா.ஆ5

6. கோரிக்கையாளர் (பத்மாவதி) பெயரிலுள்ள வீட்டு வரி இரசீது அசல் (கதவு எண்.2/62) (எண்ணிக்கை 2) – ம.சா.ஆ6

7. 06.12.2024ம் தேதியிட்ட கோரிக்கையாளர் பெயரிலுள்ள சர்வே எண். 464/2க்குண்டான பட்டா (பட்டா எண்.3586) பதிவிறக்க நகல் – ம.சா.ஆ7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:–</u>**

(எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2026.06.04 18:04:14 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.